No. of Printed Pages : 7

**6011**

பதிவு எண் | | | | | | |

# பகுதி I – தமிழ் – இரண்டாம் தாள்

**(உரைநடை, துணைப்பாடம், செய்யுள் நயம் பாராட்டல், தமிழாக்கம், படைப்பாற்றல், மொழித்திறன்)**

**June 2016**

# Language – Part I – TAMIL – Paper II

நேரம் : 3 மணி ] [ மொத்த மதிப்பெண்கள் : 80

அறிவுரை : (1) அனைத்து வினாக்களும் சரியாகப் பதிவாகி உள்ளதா என்பதனைச் சரிபார்த்துக் கொள்ளவும். அச்சுப்பதிவில் குறையிருப்பின் அறைக் கண்காணிப்பாளரிடம் உடனடியாகத் தெரிவிக்கவும்.

(2) நீலம் அல்லது கருப்பு மையினை மட்டுமே எழுதுவதற்கும் அடிக்கோடிடுவதற்கும் பயன்படுத்த வேண்டும்.

குறிப்பு : விடைகள் தெளிவாகவும் குறிப்பிட்ட அளவினதாகவும் மற்றும் சொந்த நடையிலும் அமைதல் வேண்டும்.

I. பின்வரும் வினாக்களுள் எவையேனும் **மூன்றனுக்கு** மட்டும் ஒவ்வொன்றிற்கும் **பத்து** வரிகளின் **மிகாது** விடை எழுதவும். **3x4=12**

1. நாடகத்தமிழின் சிறப்பியல்புகளாகக் கட்டுரையாசிரியர் கூறுவன யாவை ?

2. உலகில் சமரசம் பரவாமைக்குக் காரணங்களாகத் திரு.வி.க. கூறுவன யாவை ?

3. கவிதை என்பது யாது? என்ற வினாவிற்கு வோர்ட்ஸ்வொர்த் கோலரிட்ஜ் ஆகியோர் கூறும் விளக்கங்கள் யாவை ?

4. பழந்தமிழ் மக்கள் மேற்கொண்ட தொழில்களைப் பற்றி எழுதுக.

5. செந்தமிழ்நாடு, கொடுந்தமிழ்நாடு என்ற பிரிவுகள் பற்றிப் பரிதிமாற் கலைஞர் உரைப்பன யாவை ?

[ திருப்புக

II. பின்வரும் வினாக்களுள் எவையேனும் **மூன்றனுக்கு** மட்டும் ஒவ்வொன்றிற்கும் **பத்து** வரிகளின் மிகாது விடை எழுதவும். 3x4=12

6. மக்கள் நாகரிகத்தோடு மாட்டிற்கும் தொடர்புண்டு என்பதனைப் பாவாணர் கூறுமாறு யாங்ஙனம் ?

7. 'ஆ' தெய்வத்தன்மையுடையது என்பதனை எடுத்துக்காட்டுக.

8. 'செல்வம் நிலைபேறு உடையதன்று' - என்பதை நாலடி எங்ஙனம் நயம்பட நவில்கிறது?

9. தேர்தலும் ஒரு தடுமாற்றமே என்று மு.வ. உரைப்பனவற்றை விளக்குக.

10. செப்புத் திருமேனிகளின் பொற்காலம் எது ? ஏன் ?

III. பின்வரும் வினாக்களுள் ஏதேனும் **ஒன்றனுக்கு** மட்டும் **இருபது** வரிகளின் மிகாது விடை எழுதவும். 1x6=6

11. நாடு, சமயம், சாதி இவற்றை அடிப்படையாகக் கொண்டு சமரச உணர்வினின்று மாறுபடுதல் தவறாம் என்று திரு.வி.க. வாதிடுவதனை விளக்குக.

12. மனித வாழ்வே பெரியது என்னும் அடிப்படையில் மு.வ. உரைக்கும் எதிர்காலக் கனவு யாது ?

IV. பின்வரும் வினாக்கள் **ஒவ்வொன்றிற்கும் இரண்டு** பக்கங்களுக்கு மிகாமல் விடை எழுதவும். 2x10=20

13. 'கிழிசல்'அல்லது 'மண்' - சிறு கதையைக் கருப்பொருளும் சுவையும் குன்றாமல் சுருக்கி வரைக.

**அல்லது**

'பழிக்குப்பழி' அல்லது 'ஓர் உல்லாசப் பயணம்' என்னும் சிறு கதையில் இடம் பெறும் ஏதேனும் ஒரு நிகழ்ச்சியை நாடகமாக எழுதுக.

**14.** 'சட்டை' அல்லது 'வேலி ' என்னும் சிறுகதையில் வரும் கதைமாந்தர் குறித்துத் திறனாய்வு செய்க.

அல்லது

பால்வண்ணம் பிள்ளை பிடிவாத குணத்தை விட்டுச் சிறந்த குடும்பத் தலைவராக மாறியதாக உம் கற்பனைத் திறத்தால் ஒரு கதை எழுதுக.

அல்லது

புதல்வனால் கைவிடப்பட்டு, முதியோர் இல்லத்தில் தங்கியுள்ள தந்தையொருவர் சொல்வது போல நும் சொந்த நடையில் ஒரு கதை எழுதுக.

**V. 15.** பின்வரும் செய்யுளைப் படித்துணர்ந்து அதில் அமைந்துள்ள திரண்ட கருத்து, மையக்கருத்தை நயத்துடன் எடுத்துரைத்து எதுகை, மோனை, இயைபு, முரண், அணி, சந்தச்சுவை, உவமை, உருவகம், கற்பனை ஆகியவற்றுள் ஏற்புடையவற்றைச் சுட்டி எழுதுக. **1x10=10**

எந்தக் கடவுளை எவர் தொழுதாலும்
    எத்தனை வேற்றுமை நமக்கிருந் தாலும்
இந்தியர்க் கெல்லாம் பொதுவாம் தெய்வம்
    இந்தக் கொடியே இதிலென்ன ஐயம்
காற்றொடு பெருமழை கலந்தடித் தாலும்
    கடுத்தவர் இருந்திடில் படையெடுத் தாலும்
போற்றிக் கொடியை உயிரெனக் காப்போம்
    பூதலம் வியந்திடும் புகழொடு பூப்போம்
ஏழையும் செல்வனும் எனதென தென்றே
    எல்லோ ரும்தொழ நடுவினில் நின்றே
வாழிய வையகம் வாழ்ந்திட வேண்டி
    வாழிய கொடியே வாழ்கபல் லாண்டு!

- நாமக்கல் கவிஞர் வெ. இராமலிங்கம் பிள்ளை.

[ திருப்புக

குறிப்பு : காது கேளாத மாணவர்களுக்கு மட்டும் கீழ்க்கண்ட **VI** மற்றும் **VII** வினாக்களுக்கு மாற்று வினா வழங்கப்பட்டுள்ளன.

**VI.** பின்வரும் தொடர்களில் **எவையேனும் மூன்றனுக்கு** மட்டும் தமிழாக்கம் தருக. **3x2=6**

**16.** Prevention is better than cure.

**17.** Misfortunes never come single.

**18.** Strike while the iron is hot.

**19.** Too Much of anything is good for nothing.

**20.** Familiarity breeds contempt.

**21.** A penny saved is a penny gained.

**VII. 22.** பின்வரும் பழமொழிகளுள் **ஒன்றினை** விளக்கும் வகையில், வாழ்க்கை நிகழ்வில் அமைத்துப் **பத்து** வரிகளில் எழுதவும். **1x4=4**

(அ) ''உப்பிட்டவரை உள்ளளவும் நினை''.

(ஆ) ''நுணலும் தன் வாயால் கெடும்''.

(இ) ''காற்றுள்ளபோதே தூற்றிக்கொள்''.

அல்லது

''உழைப்பு'' அல்லது 'தென்றல்' என்னும் தலைப்பில் சிந்தித்து, உமது சொந்தப் படைப்பாகக் கவிதை ஒன்றை எட்டு அடிகளுக்குக் குறையாமலும் பத்து அடிகளுக்கு மிகாமலும் எழுதுக.

குறிப்பு : காது கேளாத மாணவர்களுக்கான மாற்று வினா. **VI** மற்றும் **VII**-ல் உள்ள வினாக்களுக்குப் பதிலாக காது கேளாத மாணவர்கள் பின்வரும் பத்தியைக் கவனமாகப் படித்து கீழே கொடுக்கப்பட்டுள்ள வினாக்களுக்கு வினா எண் **16** முதல் **22** வரையில் உள்ளவற்றில் எவையேனும் **ஐந்தனுக்கு** மட்டும் ஏற்ற விடையை எழுதுக. **5x2=10**

இன்றைய பட்டதாரிகளிடம் அறிவுத் தாகம் குறைந்து வரும் அவலநிலை உள்ளது. இவர்கள் படிக்கும் போதே பாட நூல்களை ஓரங்கட்டி குறிப்பேடுகளைத் தவறாமல் வாங்கிப் படித்தவர்கள். இதனால் மூல நூல்கள் தூசி படிந்து கிடக்கின்றன. தங்கள் துறைகளைச் சார்ந்த நூல்களையாவது படிக்க வேண்டும். தரக்குறைவான இதழ்களைப் படிப்பதை ஒதுக்க வேண்டும். சுயநலத்திலும், திரைப்படம், தொலைக்காட்சி ஆகிய கவர்ச்சிகளிலும் நம்மை இழந்து விடக் கூடாது.

இந்த நூற்றாண்டின் இடைப்பகுதியில் ஒரு வியட்நாம் கவிஞன் அடிமையானது பற்றி எழுதுகின்றான். பிரெஞ்சுக்காரர்களின் ஆயுதங்கள் எங்களை அடிமைப்படுத்தின. ஆனால், அவர்களின் நாட்டு நூல்கள் எங்களுக்கு விடுதலை பெற்றுத் தந்தன என்பது அக்கவிஞனது கூற்று.

டால்ஸ்டாய் தம் **15**-வது வயதில் ஒரு நாள் நூலகத்தில் ரூசோவின் சமுதாய ஒப்பந்தம் என்ற நூலைப் படித்தார். அன்று முதல் ரூசோவின் உருவம் தாங்கிய பதக்கத்தைப் பெருமையுடன் தமது கழுத்தில் அணிந்து கொண்டார். ஆகையால் பட்டதாரிகள் ஓய்வு நேரங்களில் நூலகம் நோக்கிச் செல்ல வேண்டும்.

**வினாக்கள் :**

**16.** இன்றைய பட்டதாரிகளிடம் குறைந்து வருவது எது ?

**17.** தூசி படிந்து கிடப்பவை யாவை ?

**18.** ஒதுக்க வேண்டியது எது ?

**19.** வியட்நாம் கவிஞனின் கூற்று யாது ?

**20.** சமுதாய ஒப்பந்தம் என்ற நூலை எழுதியவர் யார் ?

[ திருப்புக

21. ரூசோவின் உருவம் தாங்கிய பதக்கத்தைப் பெருமையுடன் அணிந்து கொண்டவர் யார் ?

22. பட்டதாரிகள் ஓய்வு நேரங்களில் என்ன செய்ய வேண்டும் ?

VIII. பின்வரும் வினாக்களுக்கு அடைப்புக் குறிகளுக்குள் குறிப்பிட்டுள்ளவாறு விடை எழுதுக. **10x1=10**

23. விழாவில் பல அறிஞர்கள் பேசினர்.

(பிழையைத் திருத்தி எழுதுக.)

24. ''செல்வ சிறுமீர்காள்! நீராட போதுவீர்'', என்றாள் கோதை.

(தேவையான இடங்களில் வல்லின மெய்களை இட்டு எழுதுக.)

25. கொடுத்த சேதியைக் கோர்வையாய்ப் பேசு.

(தொடரில் உள்ள கொச்சைச் சொற்களை திருத்தி எழுதுக.)

26. இந்த வேர்ல்டுல நம் நாடு ஃபர்ஸ்ட் கண்டிரியா விளங்க நாம உழைக்கனும்.

(ஆங்கிலச் சொற்கலப்பை நீக்கி இனிய தமிழில் எழுதுக.)

27. வாழ்கத் தமிழ் என்று அவனாச் சொன்னான்
அறிந்துச் சொல் எனக்கு.

(தேவையற்ற இடங்களில் உள்ள வல்லின மெய்களை நீக்கி எழுதுக.)

28. ஆற்றில் வெல்லம் கறை புரண்டு ஓடியது.

(எழுத்துப் பிழைகளைத் திருத்தி எழுதுக.)

29. என் ஏகபுத்திரன் ஜானவாசத்திற்குச் சகலரும் வரணும்

(வடசொற்கலப்பை நீக்கி இனிய தமிழில் எழுதுக.)

**30.** காகம் கூவும், நாய் கத்தும்

(மரபு வழுவை நீக்கி எழுதுக.)

**31.** அலை - அழை **(அல்லது)** அரண் - அரன் (பொருள் வேறுபாட்டை உணர்த்தும் வகையில் தனித்தனி வாக்கியங்களில் அமைத்து எழுதுக.)

**32.** அதனால்தான் கடுகைத் துளைத்து ஏழ்கடலைப் புகட்டிக் குறுகத்தறித்த குறள் என இடைக்காடனார் கூறினார் போலும்.

(பொருத்தமான நிறுத்தற் குறிகளை இட்டெழுதுக.)

-oOo-